ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
அப்பன் திருவடிகளே சரணம்.

-வாக்ய குரு பரம்பரை-

அஸ்மத் குருப்யோ நம: ||
அஸ்மத் பரம குருப்யோ நம: ||
அஸ்மத் ஸர்வ குருப்யோ நம: ||
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ||
ஸ்ரீ பராங்குசதாஸாய நம: ||
ஸ்ரீமத் யாமுநமுனயே நம: ||
ஸ்ரீ ராமமிச்ராய நம: ||
ஸ்ரீ புண்டரீகாக்ஷாய நம: ||
ஸ்ரீமந் நாதமுனயே நம: ||
ஸ்ரீமதே சடகோபாய நம: ||
ஸ்ரீமதே விஷ்வக்ஸேனாய நம: ||
ச்ரியை நம: ||
ஸ்ரீதராய நம: ||

-ச்லோக குரு பரம்பரை-

அஸ்மத் தேசிக மஸ்மதீய பரமாசார்யானசேஷான் குருன்
ஸ்ரீமல் லக்ஷ்மணயோகி புங்கவ மஹாபூர்ணௌ முனிம் யாமுனம் ।
ராமம் பத்மவிலோசனம் முனிவரம் நாதம் சடத்வேஷிணம்
ஸேனேசம் ச்ரியமிந்திரா ஸஹசரம் நாராயணம் ஸம்ச்ரயே ||

-திருமந்திரம்-

ஓம் நமோ நாராயணாய

-த்வயம்-

ஸ்ரீமந் நாராயண சரணௌ சரணம் ப்ரபத்யே,
ஸ்ரீமதே நாராயணாய நம..

**-ஸ்ரீ கிருஷ்ண சரமச்லோகம்-**

ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாமேகம் சரணம் வ்ரஜ ।
அஹம் த்வா ஸர்வபாபேப்ய: மோக்ஷயிஷ்யாமி மாசுச: ॥

**-ஸ்ரீ வராஹ சரம ச்லோகம்-**

ஸ்திதே மனஸி ஸுஸ்வஸ்தே சரீரேஸதி யோ நர: ।
தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்தா விச்வரூபம்ச மாமஜம் ॥
ததஸ் தம் ம்ரியமாணம்து காஷ்டபாஷாண ஸந்நிபம் ।
அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம்கதிம் ॥

**-ஸ்ரீராம சரம ச்லோகம்-**

ஸக்ருதேவ ப்ரபன்னாய தவாஸ்மீதிச யாசதே ।
அபயம் ஸர்வ பூதேப்ய: ததாம்யேதத் வ்ரதம் மம ॥

**ஸமாச்ரயண பரம்பரைத் தனியன்கள்-**

**-ராமானுஜாசாரியர் தனியன்-**

வாதூலான்வய வார்தீந்தும் ராமானுஜகுரோ:ஸுதம் ।
தத்ப்ராப் தோபயவேதாந்தம் ப்ரணதார்த்தி ஹரம் பஜே. ॥

ஸ்ரீமத் வதூலவர தார்யகுரோஸ் தனூஜம்
ஸ்ரீவாஸஸூரி பதபங்கஜ ராஜ ஹம்ஸம் ।
ஸ்ரீமந் நதார்த்தி ஹரதேசிக பௌத்ர ரத்னம்
ராமானுஜம் குருவரம் சரணம் ப்ரபத்யே ॥

**-வரதாசாரியர் தனியன்-**

ப்ரணதார்த்தி ஹராசார்ய தனயம் தத்பதாச்ரயம் ।
தத்க்ருபாலப்தஸத்ஸத்தம் வந்தே வரத ஸத்குரும் ॥

**-ப்ரணதார்த்திஹராசாரியர் தனியன்-**

வேங்கடார்ய க்ருபாபாத்ரம் ப்ரணதார்த்திஹரம் குரும் ।
வாதூல குலஜீவாதும் வந்தே வாத்ஸல்ய ஸாகரம் ॥

**-வேங்கடாசாரியர் தனியன்-**

ஸ்ரீமத் வதூலஸூநதார்த்தி ஹரார்ய புத்ரம்
ஸ்ரீமச்சடாரியதிராட் பதபத்ம ப்ருங்கம் ।



தஸ்மா தவாப்த நிகமாந்த யுகார்த்த ஜாலம்
ஸ்ரீ வேங்கடார்ய குருசேகர மாச்ரயாம: ॥

**-ப்ரணதார்த்திஹராசாரியர் தனியன்-**

ஸ்ரீமச்சடாரி யதிராட்பத பத்ம ப்ருங்கம்
தஸ்மா தவாப்த நிகமத்வய தத்வ போதம் ।
ஸ்ரீமத் வதூல வரதார்ய குரோஸ்தனூஜம்
ஸ்ரீமந் நதார்த்தி ஹரதேசிக மாச்ரயாம: ॥

**-வேங்கடாசாரியர் தனியன்-**

ஸ்ரீமத் வதூல குலவாரிதி பூர்ணசந்த்ரம்
ஸ்ரீவேங்கடார்ய தனயம் ச்ரிததத் பதாப்ஜம் ।
தஸ்மா தவாப்த நிகமாந்த ரஹஸ்ய ஜாலம்
ஸ்ரீவேங்கடேச குருவர்ய மஹம் ப்ரபத்யே ॥

**-பெரிய அப்பூர்ணப்பங்கார் வரதாசாரியர் தனியன்-**

ஸ்ரீமத் வதூல குலபூஷண வேங்கடார்ய
ஸூனும் ததீய பதபங்கஜ ராஜ ஹம்ஸம் ।
தத் ப்ராப்ததீவிலஸிதம் நிகமாந்த துர்யம்
ஸ்ரீமத் வரப்ர தகுரும் சரணம் ப்ரபத்யே ॥

**-பெரியப்பன் வெங்கடாசாரியர் தனியன்-**

ஸ்ரீ வாதூல நதார்த்தி ஹ்ருத் குருவர ஸ்ரீமத்ஸுதம் தேசிகம்
தத் பாதாப்ஜ நிவிஷ்ட ரக்ஷணபரம் தத்வார்த்த தத்தாதரம். ।
ஸ்ரீ வத்ஸான்வய வார்தி கைரவ ஸுஹ்ருத்
ராமானுஜார்யோல்லஸத்
காருண்யாப்தஸமஸ்தவித்யமனகம் ஸ்ரீவேங்கடார்யம் பஜே ॥

**-ப்ரணதார்த்தி ஹராசாரியர் தனியன்-**

வாதூல வம்ச்ய வரதார்ய குரோஸ்தனூஜம்
தத்பாத ஸம்ச்ரயண லப்த ரஹஸ்ய ஜாலம் ।
ஸ்ரீ வாத்ஸ்ய வம்ச்ய வரதார்ய க்ருபாத்த வித்யம்
வந்தே நதார்த்தி ஹரதேசிக மார்ய ரத்னம் ॥

-வரதாசாரியர் தனியன்-

ஸ்ரீவேங்கடார்யபத பங்கஜ ராஜ ஹம்ஸம்
ஸ்ரீமந் நதார்த்தி ஹரதேசிக புத்ர ரத்னம் ।
ஸ்ரீவாஸ லக்ஷ்மண முனீந்த்ர க்ருபாப்த போதம்
தத் ஸம்ச்ரயம் வரத தேசிக மாச்ரயாம: ॥

-வேங்கடாசாரியர் தனியன்-

ப்ரணதார்த்தி ஹராசார்ய பதபங்கஜ ஷட்பதம் ।
வரதார்ய க்ருபா பாத்ரம் வேங்கடார்ய மஹம் பஜே ॥

-ப்ரணதார்த்தி ஹராசாரியர் தனியன்-

ப்ரணதார்த்தி ஹராசார்ய பௌத்ரம் தத்பாத ஸம்ச்ரயம் ।
வரதார்யாத்மஜம் வந்தே நதார்த்தி ஹரதேசிகம் ॥

-வரதாசாரியர் தனியன்-

யதீந்த்ர சரண த்ராண வம்சஜம் வரதாஹ்வயம் ।
வேங்கடார்ய குரோ: பௌத்ரம் வந்தே தத்பாத சம்ச்ரயம் ॥

-ப்ரணதார்த்தி ஹராசாரியர் தனியன்-

வாதூல வம்சதிலகம்வாத்ஸல்யகுண ஸாகரம் ।
வேங்கடார்ய குரோ: ஸூனும் ப்ரணதார்த்திஹரம் பஜே ॥

-அப்பூர்ண அப்பங்கார் வரதாசாரியர் தனியன்-

வாதூல வேங்கடாசார்ய தனயம் வினயோஜ்ஜ்வலம் ।
வேதாந்த த்வயஸாரஜ்ஞம் வந்தே வரத தேசிகம் ॥

-சாரீரகம் அண்ணன் வரதாசாரியர் தனியன்-

வாதூலான்வய ஜீவாதும் வரதாசார்ய நந்தனம் ।
வேங்கடார்ய க்ருபா பாத்ரம் வேங்கடேச குரும் பஜே ॥

-வேங்கடாசாரியர் தனியன்-

வாதூல ரத்நாகர பூர்ணசந்த்ரம்
ஸ்ரீவேங்கடாசார்ய தயைக பாத்ரம் ।
ஸ்ரீரங்கராஜார்ய குரோஸ்தனூஜம்
ஸ்ரீவேங்கடாசார்ய மஹம் ப்ரபத்யே ॥



-சாரீரகதர்பணம் அண்ணன் வரதாசாரியர் தனியன்-

வாதூல துர்ய வரதார்ய தயைகபாத்ரம்
ஸ்ரீவேங்கடேச குருவர்ய தனூஜரத்னம் ।
வேதாந்த யுக்ம விசதீகரணைக தீக்ஷம்
சாந்த்யர்ணவம் வரத தேசிகமாச்ரயாம: ॥

-ப்ரணதார்த்திஹராசார்யர் தனியன்-

வாதூல தூர்வஹந தார்த்தி ஹரார்யஸூனோ:
தத்ஸம்ச்ரயஸ்ய வரதார்ய குரோஸ்தனூஜம் ।
வேதாந்த யுக்ம விசதீகரணைக தீக்ஷம்
ஸ்ரீமந்நதார்த்தி ஹரதேசிக மாச்ரயாம: ॥

-அப்பூவினண்ணன் வேங்கடாசார்யர் தனியன்-

வாதூல தூர்வஹநதார்த்தி ஹரார்யஸூனோ:
தத்ஸம்ச்ரயஸ்ய வரதார்ய குரோஸ்தனூஜம் ।
வேதாந்தயுக்ம விசதீகரண ப்ரவீணம்
ஸ்ரீவேங்கடேச குருவர்ய மஹம் ப்ரபத்யே ॥

-அப்பூவினண்ணன் வரதாசார்யர் தனியன்-

ப்ரணதார்த்தி ஹராசார்ய ஸூனும் வரததேசிகம் ।
ப்ரபத்யே ஸ்ரீனிவாஸார்ய ப்ரவணம்
ஸத்குணார்ணவம் ॥

அப்பு அய்யங்கார் தனியன்

யத்குருஸ் ஸ்ரீனிவாஸார்யயோ வாதூலோ வரதானுஜ: ।
தம்வந்தே தத்குலோத்தம்ஸம் ப்ரணதார்த்தி ஹரம்குரும் ॥

-கோயில் கந்தாடை அப்பன் ஸ்வாமி தனியன்-

வரதகுரு சரணம் சரணம் வரவரமுனிவர்ய கனக்ருபா பாத்திரம் ।
ப்ரவகுண ரத்ன ஜலதிம் ப்ரணமாமி ஸ்ரீனிவாஸ குருவர்யம் ॥
தேசிகம் ஸ்ரீனிவாஸாக்யம் தேவராஜ குரோஸ்ஸூதம் ।
பூஷிதம் ஸத்குணைர்வந்தே ஜீவிதம் மமஸர்வதா ॥

-கோவில் கந்தாடையண்ணன் தனியன்-

ஸகலவேதாந்த ஸாரார்த்த பூர்ணாசயம்
விபுல வாதூல கோத்ரோத்பவானாம் வரம் ।
ருசிரஜாமாத்ருயோகீந்த்ர பாதாச்ரயம்
வரதநாராயணம் மத்குரும் ஸம்ச்ரயே ॥

-மணவாள மாமுனிகள் தனியன்-

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம் ।
யதீந்த்ர ப்ரவணம் வந்தே ரம்ய ஜாமாதரம்முனிம் ॥

திருவாய்மொழிப் பிள்ளை தனியன்

நம: ஸ்ரீசைலநாதாய குந்தீநகர ஜன்மனே ।
ப்ரஸாத லப்தபரம ப்ராப்யகைங்கர்யசாலினே ॥

-பிள்ளை லோகாசார்யர் தனியன்-

லோகாசார்யாய குரவே க்ருஷ்ணபாதஸ்ய ஸூனவே ।
ஸம்ஸாரபோகி ஸந்தஷ்டஜீவ ஜீவாதவேநம: ॥

-வடக்குத்திருவீதிப் பிள்ளை தனியன்-

ஸ்ரீக்ருஷ்ண பாதபாதாப்ஜே நமாமி சிரஸா ஸதா ।
யத்ப்ரஸாத ப்ரபாவேன ஸர்வஸித்திரபூன்மம ॥

-நம்பிள்ளை தனியன்-

வேதாந்த வேத்யாம்ருத வாரிராசே:
வேதார்த்த ஸாராம்ருத பூரமக்ர்யம் ।
ஆதாய வர்ஷந்தமஹம் பரபத்யே
காருண்ய பூர்ணம் கலிவைரி தாஸம் ॥

-நஞ்சீயர் தனியன்-

நமோவேதாந்த வேத்யாய
ஜகன் மங்கள ஹேதவே ।
யஸ்யவாகம்ருதஸார:
பூரிதம் புவனத்ரயம் ॥



-பட்டர் தனியன்-

ஸ்ரீபராசரபட்டார்ய: ஸ்ரீரங்கேச புரோஹித: ।
ஸ்ரீவத்ஸாங்கஸுத: ஸ்ரீமான் ச்ரேயஸேமேஸ்து பூயஸே ॥

-எம்பார் தனியன்-

ராமானுஜ பதச்சாயா கோவிந்தாஹ்வன பாயினீ ।
ததாயத் தஸ்வரூபா ஸா ஜீயான் மத்விச்ரமஸ்தலீ ॥

-முதலியாண்டான் தனியன்-

பாதுகே யதிராஜஸ்ய கதயந்தி யதாக்யயா ।
தஸ்ய தாசரதே: பாதௌ சிரஸா தாரயாம்யஹம் ॥

-கூரத்தாழ்வான் தனியன்-

ஸ்ரீவத்ஸ சிஹ்னமிச்ரேப்ய: நமஉக்திமதீமஹி ।
யதுக்தய: த்ரயீகண்டே யாந்தி மங்கள ஸூத்ர தாம் ॥

-எம்பெருமானார் தனியன்-

யோநித்ய மச்யுதபதாம்புஜயுக்மருக்ம
வ்யாமோஹத: ததிதராணி த்ருணாய மேனே ।
அஸ்மத்குரோ: பகவதோஸ்ய தயைகஸிந்தோ:
ராமானுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே ॥

-பெரியநம்பி தனியன்-

கமலாபதி கல்யாண குணாம்ருத நிஷேவயா ।
பூர்ண காமாய ஸததம் பூர்ணாய மஹதே நம: ॥

-ஆளவந்தார் தனியன்-

யத்பதாம்போருஹத்யான வித்வஸ்தாசேஷகல்மஷ: ।
வஸ்து தாம் உபயாதோஹம் யாமுனேயம் நமாமிதம் ॥

-மணக்கால் நம்பி தனியன்-

அயத்நதோ யாமுன மாத்ம தாஸம்
அளர்கபத்ரார்ப்பண நிஷ்க்ரயேண ।
யத்ரீதவான் ஆஸ்தித யௌவராஜ்யம்
நமாமிதம் ராமம் அமேயஸத்வம் ।

-உய்யக்கொண்டார் தனியன்-

நம: பங்கஜநேத்ராய நாதஸ்ரீபாத பங்கஜே ।
ந்யஸ்த ஸர்வபராயாஸ்மத்குல நாதாய தீமதே ॥

-நாதமுனிகள் தனியன்-

நமோசிந்யாத்புதாக்லிஷ்ட ஜ்ஞான வைராக்ய ராசயே ।
நாதாய முனயே அகாத பகவத் பக்தி ஸிந்தவே ॥

-நம்மாழ்வார் தனியன்-

மாதாபிதா யுவதய: தனயா விபூதி:
ஸர்வம் யதேவ நியமேன மதன்வயானாம் ।
ஆத்யஸ்ய ந: குலபதே: வகுளபிராமம்
ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்னா ॥

-ஸேனை முதலிகள் தனியன்-

ஸ்ரீரங்க சந்த்ரமஸமிந்திரயா விஹர்த்தும்
வின்யஸ்ய விச்வ சிதசிந் நயநாதிகாரம் ।
யோனிர்வஹத்யனிசம் அங்குளி முத்ரயைவ
ஸேனான்ய மன்ய விமுகா: தமசிச்ரியாம: ॥

-பெரிய பிராட்டியார் தனியன்-

நம: ஸ்ரீரங்க நாயக்யை யத்ப்ரூவிப்ரம பேதத: ।
ஈசேசிதவ்ய வைஷம்ய நிம்னோன்னத மிதம் ஜகத் ॥

-பெரிய பெருமாள் தனியன்-

ஸ்ரீ ஸ்தனாபரணம் தேஜ: ஸ்ரீரங்கேசயாமாச்ரயே ।
சிந்தாமணி மிவோத்பாந்தம் உத்ஸங்கே அநந்த போகின: ॥
வாதூல தேவராஜார்யம் தேவாதிப குருத்தமம் ।
கோபுரேச குருஞ்சைவ ராமானுஜ குருத்தமம் ॥
தஜ் ஜ்யேஷ்டம் வரதாசார்யம் மித்ர தாத குருந்தத: ।
வாதூல தேசிகம் முக்யம் தன்விநம் யதிசேகரம் ॥
ஸ்ரீமத் தாசரதிம் வந்தே ராமானுஜ பதாஹ்வயம் ।
வாதூலானா மலங்காரம் த்ரிதண்டா ஹ்வயதேசிகம் ॥

அப்பன் திருவடிகளே சரணம்



ஸ்ரீமதேராமானுஜாயநம:
அப்பன்திருவடிகளே சரணம்

-திருமுடிவர்க்கம்-

**1. எம்பெருமானார்**
அவதாரம்-சித்திரையில் திருவாதிரை.

**2. முதலியாண்டான்**
திருநக்ஷத்திரம்-சித்திரையில் புனர்வசு

**3. கந்தாடையாண்டான்**
திருநக்ஷத்திரம்-மாசி மாதம் புனர்வசு

**4. துன்னுபுகழ் கந்தாடைத் தோழப்பர்**
திருநக்ஷத்திரம்-ஆடி மாதம் பூரட்டாதி.

**5. ஈயான் ராமானுஜாசாரியர்**
திருநக்ஷத்திரம்-புரட்டாசி மாதம் திருவோணம்.

**6. திருக்கோபுரத்து நயினார்**
திருநக்ஷத்திரம்-மாசிமாதம் கேட்டை

**7. தெய்வங்கள் பெருமாள்**
திருநக்ஷத்திரம்-ஆவணி மாதம் திருவோணம்

**8. தேவராஜ தோழப்பர்**
திருநக்ஷத்திரம்-சித்திரை மாதம் ஹஸ்தம்

**9. கோயில் கந்தாடை அண்ணன்**
திருநக்ஷத்திரம்-புரட்டாசி மாதம் பூரட்டாதி

**10. பெரியகோயில் கந்தாடையப்பன்**
திருநக்ஷத்திரம்-புரட்டாசி மாதம் மகம்.
தீர்த்தம்-கார்த்திகை மாதம் சுக்லபஞ்சமி திதி.

**11. அப்புவய்யங்கார்**
திருநக்ஷத்திரம்-வைகாசி மாதம் திருவோணம்.
தீர்த்தம்-மார்கழி மாதம் கிருஷ்ணாஷ்டமி-திதி.

**12. அப்பூவினண்ணன் வரதாசாரியர்**
திருநக்ஷத்திரம்-சித்திரை மாதம் மூலம்
தீர்த்தம்-மாசி மாதம் கிருஷ்ண த்விதீயை திதி.

13. அப்பூவினண்ணன் வேங்கடாசாரியர்.

திருநக்ஷத்திரம்-சித்திரை மாதம் விசாகம்

14. சாரீரக தர்ப்பணம் அண்ணன் வரதாசாரியர்

திருநக்ஷத்திரம்-ஆனி மாதம் ஸ்வாதி.

15. பிரண தார்த்தி ஹராசாரியர்

16. வேங்கடாசாரியர்.

17. அப்பூர்ண அப்பங்கார் வேங்கடாசாரியர்

திருநக்ஷத்திரம்-ஆனி மாதம் அனுஷம்

18. அப்பூர்ண அப்பங்கார் வரதாசாரியர்

19. பிரணதார்த்தி ஹராசாரியர்

திரு நக்ஷத்திரம்-மாசி மாதம் ஸ்வாதி

20. வரதாசாரியர்

21. வேங்கடாசாரியர்

22. வரதாசாரியர்

23. பிரணதார்த்தி ஹராசாரியர்

24. பெரியப்பன் வேங்கடாசாரியர்

திரு நக்ஷத்திரம்-சித்திரை மாதம் கார்த்திகை

25. பெரியப்பூர்ண அப்பங்கார் வரதாசாரியர்

திரு நக்ஷத்திரம்-ஆடி மாதம் விசாகம்

26. வேங்கடாசாரியர்

27. பிரணதார்த்தி ஹராசாரியர்

திருநக்ஷத்திரம்-பங்குனி மாதம் மகம்.

28. பெரியஸ்வாமி வேங்கடாசாரியர்

திருநக்ஷத்திரம்-ஆனி மாதம் ரோஹினி

29. பிரணதார்த்தி ஹரா சாரியர்

திருநக்ஷத்திரம்-ஆவணி மாதம் உத்திரட்டாதி

தீர்த்தம்-மார்கழி மாதம் சுக்ல ப்ரதமை திதி



30. வரதாசாரியர்

திருநக்ஷத்திரம்-மாசி மாதம் மூலம்

தீர்த்தம்-புரட்டாசி மாதம் சுக்ல தசமி திதி

31. அப்பன் ராமானுஜாசாரியர்

திருநக்ஷத்திரம்-மார்கழி மாதம் மூலம்

-அவதார ச்லோகம்-

ஸ்ரீமத் கைரவணீஸரோவரதடே ஸ்ரீபார்த்த ஸூதோஜ்ஜ்வலே
ஸ்ரீலக்ஷ்ம்யாம் யுவவத்ஸரே சுபதனுர்மூலே வதீர்ணம்புவி ।
ஸ்ரீவாதூலரமாநிவாஸஸூகுரோ:ராமானுஜாக்யம் குணை:
ப்ராஜிஷ்ணும் வரதார்ய ஸத்தனயதாம் ப்ராப்தம் பஜே
ஸத்குரும்॥

ஸ்வாமி குமாரர்கள் மூன்று பேர் அதில் ஜ்யேஷ்டர்

32. பிரணதார்த்தி ஹராசாரியர்

திருநக்ஷத்திரம் - மார்கழி விசாகம்

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
அப்பன் திருவடிகளே சரணம்.

# திருவாராதனக் கிரமம்

மாத்யாந்ஹிகபர்யந்தம் நித்திய கர்மங்களைப் பண்ணி முடித்துக் கொண்டு எம்பெருமான்கோவில் வாசலிலே சென்று ஸாஷ்டாங்கமாய் தண்டம் ஸமர்ப்பித்து வலக்காலை முன்னே வைத்துச் சந்நிதியிலே பிரவேசித்து.

நாயகனாய் நின்ற நந்த கோபனுடைய
கோயில் காப்பானே*கொடித் தோன்றும் தோரண
வாயில் காப்பானே*மணிக்கதவந் தாள்திறவாய்
ஆயர் சிறுமியரோமுக்கு*அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம் துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னம் முன்னம் மாற்றாதே யம்மா; நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய்.

என்ற பாசுரத்தையும்

கௌசல்யா ஸுப்ரஜாராம ।
பூர்வாஸந்த்யா ப்வர்த்ததே
உத்திஷ்ட நரசார்த்தூல
கர்த்தவ்யம் தைவ மாஹ்னிகம் ॥

என்ற சுலோகத்தையும் அநுஸதித்து ஹஸ்த தாலத்ரயம் பண்ணி, கோவிலாழ்வார் திருக்காப்பை நீக்கி

"நமோ நமோ வாங் மாஸாதிபூமயே நமோ நமோ
வாங்மனஸைக பூமயே ।
நமோ நமோநந்த மஹாவிபூதயே நமோநமோநந்த
தயைகஸிந்தவே ॥
நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதி நபக்திமான்
த்வச்சரணாரவிந்தே ।



அகிஞ்சநோ அநன்ய கதி:சரண்ய த்வத்பாதமூலம்
சரணம்ப்ரபத்யே ॥
அபராத ஸஹஸ்ரபாஜனம் பதிதம்பீமபவார்ணவோதரே ।
அகதிம் சரணாகதம்ஹரே கிருபயா கேவலமாத்மஸாத்குரு ॥

என்று தண்டம் ஸமர்ப்பித்து எம்பெருமானுக்கு தக்ஷிண பார்ச்வத்திலே நின்று திருமுகமண்டலத்தை ஸேவித்துக் கொண்டு

ஓம் ஸ்ரீமதே நாராயணாய நம:
ஸ்ரீம் ச்ரியை நம:
பூம் பூம்யை நம:
நீம் நீளாயை நம:
ஸுதர்சனாய ஹேதிராஜாய நம:
சங்கானாமதிபதயே பாஞ்சஜன்யாய நம:
அநந்தாய நாகராஜாய நம:
வைனதேயாய கருடாய நம:
ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:
ஸமஸ்தபரிவாராய ஸ்ரீமதே நாராயணாய நம:
ஸ்ரீபராங்குச பரகாலாதிப்யோ நம:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீமதே ரம்யஜாமாத்ருமுனயே நம:

என்று அநுஸந்தித்து, திருத்துழாய் ஸமர்ப்பித்து ஸ்வாசார்யனுக்கு அலங்காராஸனாந்தம் செய்து அகிஞ்சனனாயிருக்கிற அடியேனை ஆசார்யன் தேவரீருடைய திருவாராதனத்திலே நியமித்தருளினான், ஆசார்யன் திருக்கைகளாலே பூர்ணாராதனம் கண்டருளுகிறதற்கு "மந்திராசனத்தில் எழுந்தருள வேணும்" என்று எம்பெருமான் திருவடிகளிலே திருத்துழாய் ஸமர்ப்பித்து அனந்தரம்.

கூர்மாதீன் திவ்யலோகம் ததனு மணிமயம் மண்டபம்
தத்ரசேஷம்

தஸ்மின் தர்மாதி பீடம் ததுபரிகமலம் சாமரக்ராஹணீச்ச ।
விஷ்ணும்தேவீ: விபூஷா யுதகணமுரகம் பாதுகேவைநதேயம்
ஸேநேசம் த்வாரபாலான் குமுதமுககணான்
விஷ்ணுபக்தான் ப்ரபத்யே ॥

என்ற சுலோகத்தை அனுசந்தித்து இடது பார்ச்வத்திலே திருமஞ்சனத்தாழி வைத்து அதில் சாத்துப்பொடி ஏலம், திருத்துழாய் சேர்த்து, பவித்ரவிரலிலே திருத்துழாயை இடுக்கித் திருமஞ்சனத் தாழியைத் தொட்டுக்கொண்டு ஏழு ஆவர்த்தி த்வயா நுஸந்தானம் பண்ணி, ஆக்னேயாதி பூர்வமாக நாலு மூலையிலும் நாலுவட்டிலும், நடுவில் ஒரு வட்டிலும் வைத்து அர்க்யபாத்யாசமநீய ஸ்நாநீய சுத்தோதகங்களாக ஸ்தாபித்து, திருமஞ்சனத் தாழியிலே உத்தரணியாலே தீர்த்தமெடுத்து "ஸ்ரீமதே நாராயணாயநம:" என்று

ஐந்து பாத்திரங்களையும் சோதித்து அதில் தீர்த்தங்களைப் பூரித்து, ஏலம் திருத்துழாய் சாத்துப்பொடிசேர்த்து "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று பாத்திரங்களையும் அபிமந்திரித்து, பாத்தியாதிகளின்றும் உத்தரணியினால் தீர்த்தம் எடுத்து பாத்திரத்திலே சேர்த்து அதனின்றும் தீர்த்தமெடுத்து அதில் ஒரு துளசி தளத்தை எடுத்து இடுக்கிக் கொண்டு தன் முகத்தின் அளவு உயர எடுத்துக் காவேரி தீர்த்தமாகவும் விரஜா தீர்த்தமாகவும் த்யானித்து அந்தத் தீர்த்தத்தைத் திருமஞ்சனத்தாழியிலும் அர்க்யாதி பஞ்ச பாத்திரங்களிலும் துளி துளி சேர்த்து, மிஞ்சின தீர்த்தத்தாலே சந்நதி பிரதேசத்தையும் தன்தேகத்தையும் ப்ரோக்ஷித்துக் கொள்ளுகிறது.

பிறகு சுத்தோதக பாத்திரத்திலே உத்தரணியைச் சோதித்து "சர்வமங்கள விக்ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று அர்க்ய பாத்திரத்தினின்றும் மூன்றுதரம் அர்க்யம் சமர்ப்பித்து (திருக்கையளவே சமர்ப்பித்து) படிகத்தில் சேர்த்து விடுகிறது. உத்தரணியைச் சுத்தோதகத்தில் சோதித்துப் பாத்யத்தில்



மும்முறை பாத்யம் சமர்ப்பித்து (திருவடிகள் அளவு) உத்தரணியைச் சுத்தோதகத்தில் சோதித்து அர்க்ய பாத்திரத்தினின்று ஒரு உத்தரணி தீர்த்தம் எடுத்து எம்பெருமான் திருக்கை விளக்கி, கண்டுஷம் அர்க்யபாத்திரத்தில் மும்முறை சமர்ப்பித்து உத்தரணி சோதித்து, ஆசமனீய பாத்திரத்தில் மும்முறை ஆசமனீயம் சமர்ப்பித்து உத்தரணியைச் சுத்தோதக பாத்திரத்தில் சோதித்துத் திருபரியட்டத்தாலே திருமுகமண்டலங்கள், திருக்கைகள் திருவடிகள் இவைகளுக்குத் திருவொற்றுவாடை சமர்ப்பித்து "ஸ்நான ஆசனம் அலங்கரிக்க வேணும்" என்று திருத்துழாய் சமர்ப்பித்து, பாத்தியாசமனீயம் சமர்ப்பித்து, ஒரு திருத்துழாய் தளத்தாலே திருமுத்து விளக்கி,மற்றொரு தளத்தாலே திருநாவழித்து, அர்க்ய பாத்திரத்திலேயிருந்து மும்முறை அர்க்யம் சமர்ப்பித்து, பாத்யாசமனீயம் சமர்ப்பித்துச் சுருளமது கண்டருளப் பண்ணி எண்ணெய்க் காப்பு முதலானவை சாத்தி ஸ்நான பாத்திரத்தினின்றும் தீர்த்தமெடுத்து புருஷஸூக்தம் அநுசந்தித்துக் கொண்டே திருமஞ்சனம் செய்து, "வெண்ணெயளைந்த" இத்யாதி பாசுரத்தைச் சேவித்துக் கொண்டு ஆசமனீயம் திருவொற்றுவாடை சமர்ப்பித்து "அலங்காராசனம் கண்டருளவேணும்" என்று எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பித்து, பீதாம்பரம்சாத்தி, பாத்யாசமனீயம் ஸமர்ப்பித்து, திருமண்காப்பு, யக்ஞோபவீதம், கந்த புஷ்பதூப தீபாதிகள் ஸமர்ப்பித்து, திருத்துழாயை அஞ்சலி நிறைய எடுத்து, அஞ்சலி பண்ணிக்கொண்டு "ஹரி: ஓம் ॥ அக்னி மீளே புரோஹிதம் யக்ஞஸ்யதேவ ம்ருத்விஜம் । ஹோதாரம் ரத்னதாதமம் ॥ ஹரி: ஓம் ॥ ஹரி: ஓம் ॥ இஷேத்வோர்ஜேத்வாபாய வஸ்தோ பாய வஸ்த தேவோவஸ்ஸவிதா ப்ரார்பயது ச்ரேஷ்டதமாய கர்மணே । ஹரி: ஓம் ॥ ஹரி: ஓம் ॥ அக்ன ஆயாஹி வீதயே-க்ருணானோஹவ்ய தாதயே நிஹோதா ஸத்ஸி பர்ஹிஷி| ஹரி: ஓம் ॥ ஹரி: ஓம் ॥ சம்நோ தேவீரபிஷ்டய ஆபோ பவந்துபீதயே சம்யோரபிஸ்ர வந்து

ந:। ஹரி: ஓம் ॥ ஹரி: ஓம் ॥ ஓமித்யக்ரேவ்யாஹரேத் । நமஇதி பர்சாத் । நாராயணா யேத்யுபரிஷ்டாத் । ஓமித்யேகாக்ஷரம் । நமஇதி த்வே அக்ஷரே । நாராயணாயேதி பஞ்சாக்ஷராணி । ஏதத்வை நாராயணஸ்யாஷ்டாக்ஷரம் பதம் । யோஹவை நாராயண ஸ்யாஷ்டாக்ஷரம் பதமத்யேதி । அநுபப்ருவ: ஸர்வமாயுரேதி । விந்ததே ப்ராஜாபத்யம் ராயஸ்போஷம் கௌபத்யம் । ததோம்ருதத்வ மச்னுத ததோம்ருதத்வமச்னுத இதி । யயேவம்வேத । இத்யுபநிஷத் । ஹரி: ஓம் ॥ ஹரி: ஓம் ॥ அத கர்மாண் யாசாராத்யாநிக்ருஹ்யந்தே । உதகயந பூர்வபக்ஷாஹ: புண்யாஹேஷு கார்யாணி யக்ஞோபவீதினாப்ரதக்ஷிணம் । ஹரி: ஓம் ॥ ஹரி: ஓம் ॥ தப ஸ்வாத்யாய நிரதம் தபஸ்வீவாக்விதாம்வரம் । நாரதம் பரிபப்ரச்ச வால்மீகிர்முனிபுவங்கவம் ॥ தாஸாமாவிர பூத்சௌரி ஸ்மயமான முகாம்புஜ: । பீதாம்பரதரஸ்ஸ்ரக்வீ ஸாக்ஷாந் மன்மத மன்மத: ॥ வைகுண்டேது பரேலோகேச்ரிய ஸார்த்தம் ஜகத்பதி: ॥ ஆஸ்தேவிஷ்ணு ரசிந்த்யாத்மா பக்தைர் பாகவதைஸ் ஸஹ ॥

சென்றால் குடையாம் இருந்தால் சிங்காசனமாம்
நின்றால் மரவடியாம் நீள்கடலுள்-என்றும்
புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்
அணையாம் திருமாற் கரவு.

கதாபுன: சங்க ரதாங்க கல்பக
த்வஜாரவிந்தாங்குச வஜ்ர லாஞ்சனம் ।
த்ரிவிக்ரம த்வச்சரணாம்புஜத்வயம்
மதீய மூர்த்தான மலங்கரிஷ்யதி ॥
ஸ்ரீமாதவாங்க்ரி ஜலஜத்வய நித்யஸேவா
ப்ரேமாவிலாசய பராங்குச பாதபக்தம் ।
காமாதி தோஷஹரமாத்ம பதாச்ரிதானாம்
ராமாநுஜம் யதிபதிம் ப்ரணமாமிமூர்த்நா ॥



ஓம் வாசுதேவாய நம:
ஓம் சங்கர்ஷணாய நம:
ஓம் ப்ரத்யும்நாய நம:
ஓம் அநிருத்தாய நம:
ஓம் கேசவாய நம:
ஓம் நாராயணாய நம:
ஓம் மாதவாய நம:
ஓம் கோவிந்தாய நம:
ஓம் விஷ்ணவே நம:
ஓம் மதுசூதநாய நம:
ஓம் த்ரிவிக்ரமாய நம:
ஓம் வாமநாய நம:
ஓம் ஸ்ரீதராய நம:
ஓம் ஹ்ருஷீகேசாய நம:
ஓம் பத்மநாபாய நம:
ஓம் தாமோதராய நம:
ஓம் மத்ஸ்யாய நம:
ஓம் கூர்மாய நம:
ஓம் வராஹாய நம:
ஓம் நாரசிம்மாய நம:ங
ஓம் வாமநாய நம:
ஓம் பார்க்கவ ராமாய நம:
ஓம் ஸ்ரீராமாய நம:
ஓம் பலராமாய நம:
ஓம் கிருஷ்ணாய நம:
ஓம் கல்கிநே நம:
ஓம் நமோ நாராயணாய
மந்திர புஷ்பம் சமர்ப்பயாமி.
சமஸ்தாபராதான் க்ஷமஸ்வ. உபசாரான் அங்கீகுருஷ்வ.

"போஜ்யாசனம் கண்டருள வேண்டும்" என்று திருத்துழாயை திருவடிகளில் சமர்ப்பித்து. பாத்யாசமனீயம் சமர்ப்பித்து இந்தப்பிரகாரம் பெரியபிராட்டியார் முதலாக ஸ்வாசார்ய பர்யந்தம் மந்த்ராசனம் முதல் போஜ்யாசனம் பரியந்தம் சமர்ப்பிக்கிறது. பிறகு வட்டில் தீர்த்தங்களைச் சேர்த்துவிட்டுத் திருமஞ்சனத்தாழியில் தீர்த்தம் எடுத்து வட்டில் உத்தரணிகளைச் சோதித்து வட்டிலில் தீர்த்தம் பூரித்து "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று அபிமந்திரித்து. தளிகையைச் சமர்ப்பித்து அர்க்ய பாத்திர தீர்த்தத்தில் ஒரு உத்தரணியில் தீர்த்தம் எடுத்து "ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று புரோக்ஷித்து அந்தத் தீர்த்தத்தினாலே தளிகையைப் பரிஷேசனம் பண்ணி அபிமந்திரித்து எம்பெருமான் வலத் திருக்கைகளைத் தீர்த்தத்தாலே சோதித்து அன்னஸூக்தம்:

"கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா உன்றன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்
நாடு புகழும் பரிசினால் நன்றாக
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம்
ஆடை யுடுப்போம் அதன்பின்னே பாற்சோறு
மூடநெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய்".

"நாறு நறும்பொழில் சூழ் மாலிருஞ்சோலை நம்பிக்கு நான்,
நூறு தடாவில் வெண்ணெய் வாய்நேர்ந்து
பராவிவைத்தேன்,
நூறு தடாநிறைந்த அக்காரவடிசில் சொன்னேன்.
ஏறுதிருவுடையான் இன்று வந்து இவை கொள்ளுங்கொலோ."

"இன்று வந்தித்தனையு மமுது செய்திடப்பெறில் நான்
ஒன்று நூறாயிரமாக் கொடுத்துப் பின்னுமாளும் செய்வன்



தென்றல் மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் அடியேன் மனத்தேவந்து நேர்படிலே."

என்று அனுசந்தித்து "சர்வமங்கள விக்ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம:" என்று தளிகையைக் கண்டருளப்பண்ணி ஸ்நாநீய பாத்திரத்தில் தீர்த்தமெடுத்து மும்முறை பானீயம் சமர்ப்பித்து அர்க்ய பாத்யாசமனீயம் ஸமர்ப்பித்து ப்ரோத வஸ்திரம் ஸமர்ப்பித்து இந்தப் பிரகாரம் ஸ்ரீபூமி நீளைகளுக்கும் கிரமமாய்த் தளிகை அமுது செய்யப் பண்ணி, பிறகு அந்தத் தளிகையை நாலாகப்பகுத்து நிருதி மூலை பிரசாதத்தைச் "சுதர்சனாயஹேதிராஜாய நம:", "சங்கானாம் அதிபதியே பாஞ்சஜன்யாய நம:" என்று தளிகையைக் கண்டருளப் பண்ணி, ஈசான்ய மூலை பிரசாதத்தை "வைனதேயாய கருடாய நம:" என்று கருடாழ்வானுக்கு அமுது செய்யப் பண்ணி, வாயுமூலை பிரசாதத்தை "ஸ்ரீமதே விஷ்வக்ஸேநாய நம:" என்று விஷ்வக்ஸேனருக்கு அமுது செய்யப் பண்ணி, பானீயம் ஸமர்ப்பித்து அர்க்ய பாத்யாசமனீயம் சமர்ப்பித்து, ப்ரோத வஸ்திரம் ஸமர்ப்பித்துப் பிறகு ஒன்றாகப் பாவித்து "ஸ்ரீபராங்குசபரகாலாதிப்யோநம:" என்று ஆழ்வார்களுக்கு அமுது செய்யப் பண்ணி, "ஸ்ரீமதே ராமானுஜாய நம:" என்று உடையவருக்கும், "ஸ்ரீவரவரமுநயே நம:" என்று மணவாளமாமுனிக்கும், "அஸ்மத் குருப்யோ நம:" என்று ஆசாரியனுக்கும் தளிகை அமுது செய்யப் பண்ணி, தனித்தனியாகவே எல்லோருக்கும் பானீயம் அமுதுசெய்யப் பண்ணி அர்க்யாதி புரோத வஸ்திரம் சமர்ப்பித்து, தளிகை மாற்றச் சொல்லி எம்பெருமான் திருவடிகளில் திருத்துழாய் சமர்ப்பித்து, தண்ணீரமுது, அடைக்காய் தந்து, கர்ப்பூர ஆரத்தி பண்ணி, சாற்றுமுறை செய்யவும்.

சாற்றுமுறை கிரமம்.

சிற்றஞ்சிறுகாலே வந்துன்னைச் சேவித்து, உன்
பொற்றாமரையடியே போற்றும் பொருள்கேளாய்
பெற்றம் மேய்த்துண்ணுங் குலத்திற்பிறந்துநீ
குற்றேவ லெங்களைக் கொள்ளாமற் போகாது
இற்றைப் பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா!
எற்றைக்கு மேழேழ் பிறவிக்கும் உன்றன்னோடு
உற்றோமே யாவோ முனக்கேநாமாட்செய்வோம்
மற்றைநங் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய்.

வங்கக்கடல்கடைந்த மாதவனைக் கேசவனை
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்டவாற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்தெரியல் பட்டர்பிரான் கோதைசொன்ன
சங்கத் தமிழ்மாலை முப்பதுந் தப்பாமே
இங்கு இப்பரிசுரைப்பார் ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்குத் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய்.

நல்லை நெஞ்சே நாம்தொழுதும் நம்முடைநம் பெருமான்
அல்லிமாதர் புல்கநின்ற ஆயிரந் தோளனிடம்
நெல்லிமல்கிக் கல்லுடைப்பப் புல்லியையார்த்து அதர்வாய்ச்
சில்லுசில்லென் றொல்லறாத சிங்கவேள் குன்றமே.

செங்கணாளி இட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றுடைய
எங்களீசனெம்பிரானை இருந்தமிழ் நூற்புலவன்
மங்கையாளன் மன்னு தொல்சீர் வண்டறைதார்க்கலியன்
செங்கையாளன் செஞ்சொல்மாலை வல்லவர்தீதிலரே.

இருப்பிடம் வைகுந்தம் வேங்கடம், மாலிருஞ்சோலை யென்னும்
பொருப்பிடம் மாயனுக்கென்பர் நல்லோர், அவைதம்மொடும்வந்து
இருப்பிடம் மாயனிராமாநுசன் மனத்தின்றவன் வந்து
இருப்பிடம் என்றனிதயத்துள்ளே தனக்கின்புறவே.



இன்புற்ற சீலத்திராமாநுச என்று மெவ்விடத்தும்
என்புற்ற நோயுடல்தோறும் பிறந்திறந்து, எண்ணரிய
துன்புற்றுவீயினும் சொல்லுவதொன்றுண்டுஉன்
தொண்டர்கட்கே
அன்புற்றிருக்கும்படி என்னையாக்கியங்காட்படுத்தே.

அங்கயல் பாய்வயல் தென்னரங்கன், அணியாகமன்னும்
பங்கயமாமலர்ப் பாவையைப் போற்றுதும், பத்தியெல்லாம்
தங்கிய தென்னத்தழைத்து நெஞ்சே! நந்தலைமிசையே
பொங்கியகீர்த்தி, இராமாநுசனடிப் பூமன்னவே.

பூமன்னு மாது பொருந்திய மார்பன், புகழ்மலிந்த
பாமன்னு மாறனடிபணிந்துய்ந்தவன், பல்கலையோர்
தாம் மன்னவந்த விராமாநுசன் சரணாரவிந்தம்
நாம் மன்னிவாழ, நெஞ்சே சொல்லுமோமவன் நாமங்களே

பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத் தாண்டு
பல கோடி நூறாயிரம்
மல்லாண்ட திண்டோள் மணிவண்ணா! உன்
சேவடி செவ்விதிருக் காப்பு.

அடியோமோடும் நின்னோடும் பிரிவின்றி யாயிரம் பல்லாண்டு
வடிவாய்நின் வலமார்பினில் வாழ்கின்ற மங்கையும் பல்லாண்டு
வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு
படைபோர் புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும் பல்லாண்டே

பூருவா சாரியர்கள் போத மனுட்டானங்கள்
கூறுவார் வார்த்தைகளைக்கொண்டு நீர்-தேறி
இருள்தருமாஞாலத்தே இன்பமுற்று வாழும்
தெருள்தருமா தேசிகனைச் சேர்ந்து.
இந்தவுபதேச ரத்தினமாலை தன்னை
சிந்தைதன்னில் நாளும் சிந்திப்பார்-எந்தை

பத்யு: ஸ்ரிய: ப்ரஸாதேந ப்ராப்த ஸார்வஜ்ஞ ஸம்பதம் ।
ப்ரபந்த ஐந கூடஸ்தம் ப்ரபத்யே ஸ்ரீபராங்குஸம் ॥

சடகோபமுநிம் வந்தே சடாநாம புத்தி தூஷகம் ।
அஜ்ஞாநாம் ஜ்ஞாந ஜநகம் திந்த்ரிணீ மூலஸம்ஸ்ரயம் ॥

வகுளாபரணம் வந்தே ஜகதாபரணம் முநிம் ।
யஸ் ஸ்ருதேருத்தரம் பாகம் சக்ரே த்ராவிடபாஷயா ॥

வகுளாலங்க்ருதம் ஸ்ரீமச் சடகோபபதத்வயம் ।
அஸ்மத் குலதநம் போக்யம்அஸ்துமே மூர்த்தி பூஷணம் ॥

நமஜ்ஜநஸ்ய சித்த பித்தி பக்திசித்ரதூலிகா
பவாஹிவீர்யபஞ்ஜநே நரேந்த்ரமந்த்ரயந்த்ரணா ।
ப்ரபந்ந லோககைரவ ப்ரஸந்நசாருசந்த்ரிகா
சடாரி ஹஸ்த முத்ரிகா ஹடாத் துநோது மே தம: ॥

**நம்மாழ்வார் வாழித் திருநாமம்**

திருக்குருகைப்பெருமாள் தன் திருத்தாள்கள் வாழியே
திருவானதிருமுகத்துச் செவியென்னும் வாழியே
இருக்குமொழி என்னெஞ்சில் தேக்கினான் வாழியே
எந்தை யதிராசர்க்கு இறைவனார் வாழியே
கருக்குழியில் புகாவண்ணம் காத்தருள்வோன் வாழியே
காசினியில் ஆரியனாய்க் காட்டினான் வாழியே
வருத்த மற வந்து என்னை வாழ்வித்தான் வாழியே
மதுரகவி தம்பிரான் வாழி வாழி வாழியே

**எம்பெருமானார் வாழித் திருநாமம்**

சீராரும் எதிராசர் திருவடிகள் வாழி
திருவரையிற் சாத்திய செந்துவராடை வாழி
ஏராரும் செய்யவடிவு எப்பொழுதும் வாழி
இலங்கிய முந்நூல் வாழி இணைத்தோள்கள் வாழி
சோராத துய்ய செய்ய முகச் சோதி வாழி



தூமுறுவல் வாழி துணைமலர்க்கண்கள் வாழி
ஈராறு திருநாமமணிந்த எழில் வாழி
இனிதிருப்போடெழில் ஞானமுத்திரை வாழி.

அறுசமயச் செடியதனை அடியறுத்தான் வாழியே
அடர்ந்துவரும் குதிட்டிகளை அறத்துறந்தான் வாழியே
செறுகலியைச் சிறிதுமறத் தீர்த்துவிட்டான் வாழியே
தென்னரங்கர் செல்வம்முற்றும் திருத்திவைத்தான் வாழியே
மறையதனில் பொருளனைத்தும் வாய்மொழிந்தான் வாழியே
மாறன் உரை செய்த தமிழ் மறை வளர்த்தோன் வாழியே
அறம் மிகு நற்பெரும்பூதூர் அவதரித்தான் வாழியே
அழகாரும் யதிராசர் அடியிணைகள் வாழியே.

**எம்பெருமானார் நாள் பாட்டு**

சங்கர பாஸ்கர யாதவ பாட்ட பிரபாகர தங்கள் மதம்
சாய்வுற வாதியர்மாய்குவரென்று சதுமறைவாழ்ந்திடுநாள்
வெங்கலியிங்கினி வீறுநமக்கிலையென்று மிகத்தளர்நாள்
மேதினிநம்சுமையாறுமெனத்துயர்விட்டு விளங்கியநாள்
மங்கையராளிபராங்குசமுன்னவர் வாழ்வுமுளைத்திடுநாள்
மன்னியதென்னரங்காபுரி மாமலைமற்றுமுவந்திடுநாள்
செங்கயல்வாவிகள் சூழ்வயல் நாளும் சிறந்த பெரும்பூதூர்
சீமான் இளையாழ்வார் வந்தருளியநாள் திருவாதிரை நாளே.

**முதலியாண்டான் வாழித் திருநாமம்**

சித்திரையில் புனர்பூசம் சிறக்கவந்தோன் வாழியே
ஸ்ரீரங்கராஜரடி சிந்தை செய்வோன் வாழியே
பக்தியுடன் பதின்மர்கலைபரிந்தளிப்போன் வாழியே
பாதுகையாய் எதிபதிதாள் பதிக்குமவன் வாழியே
முக்திதரும் எட்டெழுத்தை மொழிந்தருள்வோன் வாழியே
முக்கோல் என எதிராசன் மொழிபெற்றோன் வாழியே
தத்துவ நூல் பாஷ்யத்தைத் தரித்துரைப்போன் வாழியே
தாசரதி நளினமலர்த் தாளிணைகள் வாழியே.

அத்திகிரி அருளாளர் அடிபணிவோன் வாழியே
அநவரதம் எதிராசன் அடிதொழுவோன் வாழியே
சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே
ஸ்ரீபாஷ்யச் செழும்பொருளைச் செப்புமவன் வாழியே
பச்சைவாரணம் விளங்கப் பார்வை செய்தான் வாழியே
பரகாலன் அடியிணைகள் பரவுமவன் வாழியே
உத்தமவாதூலகுலம் உவந்து வந்தோன் வாழியே
உயர் முதலியாண்டான் ஒண்பதம் இரண்டும் வாழியே.

அத்திகிரி அருளாளர் அருள்பெறுவோன் வாழியே
அருள் பச்சை வாரணத்தில் அவதரித்தான் வாழியே
சித்திரையில் புனர்பூசம் சிறக்க வந்தோன் வாழியே
ஸ்ரீபாஷ்யம் ஈடு முதல் சீர் பெறுவோன் வாழியே
உத்தமவாதூல குலம் உயரவந்தோன் வாழியே
ஊர்திருந்தச் சீர்பாதம் ஊன்றினான் வாழியே
முத்திரையும் செங்கோலும் முடிபெறுவோன் வாழியே
முதலியாண்டான் பதம்இரண்டும் ஊழிதொறும் வாழியே.

### முதலியாண்டான் நாள் பாட்டு

எட்டுமிரண்டுடனே தமிழ்வேதமுமோதி யுணர்ந்திடுநாள்
எங்குமிடர்கெட அங்கமுபாங்கமும் ஓங்கி உயர்ந்திடுநாள்
மட்டவிழும்பொழில் மன்னுமரங்கர்தம் செங்கோல்சிறந்திடு நாள்
மாகுடபாலைந்து நாரணனார்பதிவாழ்வு பொலிந்திடுநாள்
இட்டமுயர்ந்து எதிராசருடன் முறைமுப்புரியூட்டியநாள்
என்மருமானென்றிவர்பதமுந் தண்டமுமாக்கிக் கொண்டருள் நாள்
சிட்டர் மகிழ்ந்திடத் தாசரதிக்குருபோந்துபிறந்தருள்
சித்திரையில் புனர்பூசமதாகிய செல்வம் மகிழ்ந்திடுநாளே.

### மணவாளமாமுனிகள் வாழித் திருநாமம்

இப்புவியில் அரங்கேசர்க்கு ஈடளித்தான் வாழியே
எழில் திருவாய்மொழிப்பிள்ளை இணையடியோன் வாழியே



ஐப்பசியில் திருமூலத்து அவதரித்தான் வாழியே
அரவரசப் பெருஞ்சோதி அநந்தனென்றும் வாழியே
எப்புவியும் ஸ்ரீசைலம் ஏத்தவந்தோன் வாழியே
ஏராரும் யதிராசர் என உதித்தான் வாழியே
முப்புரிநூல் மணிவடமும் முக்கோல் தரித்தான் வாழியே
மூதறியும் மணவாளமாமுனிவன் வாழியே.

### மணவாளமாமுனிகள் நாள் பாட்டு

செந்தமிழ் வேதியர் சிந்தை தெளிந்து சிறந்து மகிழ்ந்திடுநாள்
சீர் உலகாரியர் செய்தருள் நற்கலை தேசுபொலிந்திடு நாள்
மந்தமதிப்புவிமானிடர் தங்களை வானில் உயர்த்திடு நாள்
மாசறு ஞானியர்சேர் யதிராசர்தம் வாழ்வு முளைத்திடு நாள்
கந்த மலர்ப்பொழில் சூழ்குருகாதிபன் கலைகள் விளங்கிடுநாள்
காரமர் மேனி அரங்க நகர்க்கிறை கண்கள் களித்திடுநாள்
அந்தமில் சீர் மணவாளமுனிப்பரன் அவதாரம் செய்திடுநாள்
அழகு திகழ்ந்திடும் ஐப்பசியில் திருமூலம் அதெனும் நாளே.

### கந்தாடை அண்ணன் வாழித் திருநாமம்

எந்தை மணவாளமுனி இணையடியோன் வாழியே
எழில் கந்தாடையப்பனுக்கு இதமுரைத்தோன் வாழியே
அந்தமில்சீர்த் திருவரங்கத்து அமர்ந்தசெல்வன் வாழியே
ஆர்ந்தபுகழ்ச் சடகோபன் அருள்பெறுவோன் வாழியே
கந்தாடைக் குலத்துதித்த கருணையோன் வாழியே
கன்னியில் பூரட்டாதி கனிந்துதித்தோன் வாழியே
பந்தமிலா எதிராசன் பதம்பணிவோன் வாழியே
பாராள் கந்தாடை அண்ணன் பதமிரண்டும் வாழியே.

### இவர் திருத்தம்பியார் கந்தாடையப்பன் வாழித் திருநாமம்

எதிராசன் நேராக இங்குதித்தோன் வாழியே
எழில் கந்தாடை அண்ணனுக்கு இளையவனார் வாழியே
மதித்தபுகழ் கன்னி தன்னில் மகத்துதித்தோன் வாழியே

மணவாளமாமுனிகள் மலரடியோன் வாழியே
பதிபாரும் நூற்றெட்டும் பணியுமவன் வாழியே
பதின்மர்கலை அனுதினமும் பகருமவன் வாழியே
எதிராசன் பாடியத்திற் கீடுரைப்போன் வாழியே
எழிலமர் கந்தாடையப்பன் இணையடிகள் வாழியே.

அப்பன் நாள் பாட்டு

சீர்மலி நான்மறை அந்தணர் ஆதியர் சிந்தை மகிழ்ந்திடு நாள்
தேனமர்சோலை அரங்கமுதற்றிதழ்பதிகள் சிறந்திடுநாள்
பூரணமேவரமாமுனி தண்ணருள் பொங்கி வழிந்திடுநாள்
புந்திதரும் திருமந்திரமும் பலகலைகள் பொலிந்திடுநாள்
ஆர்வமதா லருகழைத்து வாழ்வித்தவர் அபிமதம் ஓங்கிடு நாள்
ஆர்ந்தபுகழ் வாதூலகுலத்தவர் ஆணைசெழித்திடுநாள்
கார்நிகர் வண்கைக் கருணையன் அப்பன்
காசினிதோன்றியநாள்
கன்னிதனில் திருமாமகம் என்றும் கவினுறு நன்னாளே.

வெண்பா

மந்திரங்கள் வாழ மணவாளமுனி வாழவுயர்
எந்தை எதிராசனெழில் வாழ - சந்ததமும்
மன்னுபுகழ்க் கந்தாடை மன்னனெனுமப்பனே
இன்னமொரு நூற்றாண்டிரும்.

ப்ரணதார்த்திஹராசார்யர் வாழித் திருநாமம்

ஓங்கு புகழ் கச்சிநகர்க் குடிபதியோன் வாழியே
உத்தம வாதூலகுலத்துதித்த செல்வன் வாழியே
பாங்குடனே பதின்மர்கலை பகருமவன் வாழியே
பாருலகில் கண்ணபுரம் பணியுமவன் வாழியே
தேங்குபுகழ் வேங்கடவர் திருவடியோன் வாழியே
சிங்க வுத்திரட்டாதி செனித்த வள்ளல் வாழியே
ஈங்குணரப் பாஷியத்தை எடுத்துறைப்போன் வாழியே
எங்கள் ப்ரணதார்த்தி ஹரர் எந்நாளும் வாழியே.



வரதாசார்யர் வாழித் திருநாமம்

மாசி தனில் மூலநாள் வந்துதித்தோன் வாழியே
வண்பிரண தார்த்திஹரர் மைந்தனார் வாழியே
தேசுயர் வாதூலகுலம் செழிக்க வந்தோன் வாழியே
செய்யமறைப் பொருளனைத்தும் தேர்ந்துரைப்போன் வாழியே
காசினியில் வந்தெம்மைக் காத்தருள்வோன் வாழியே
மாசில்புகழ் கந்தாடை மறையவர்கோன் வாழியே
வரதாசாரியன் திருவடிகள் மாநிலத்தில் வாழியே.

ராமானுஜாசாரியார் வாழித் திருநாமம்

சீர் திகழும் பாஷியத்தின் சிறப்புரைப்போன் வாழியே
செய்யபக வற்கீதை திறனுரைப்போன் வாழியே
பேர்திகழும் ஈடுநலம் பேசிடுவோன் வாழியே
பெற்றயணி பூதூருள் பிறங்கிடுவோன் வாழியே
பார்புகழும் எட்டெழுத்தின் பண்புரைப்போன் வாழியே
பண்புமிகு மூலச்சீர் பரவவந்தோன் வாழியே
ஆர்வமுடன் சீடர்க்கே அருள்புரிவோன் வாழியே
அன்புமிகு ராமானுஜர் அடியிணைகள் வாழியே.

ராமானுஜாசாரியார் நான்பாட்டு

பூ மகளின் நாதனருள் பொங்கிமிக வளர்ந்திடுநாள்
பூதூரெ திராசமுனி போதமொழி பொலிந்திடுநாள்
நேமமிகு சிட்டரினம் நேர்த்தியாய்த் திகழ்ந்திடுநாள்
நீணிலத்துள் வேத நெறி நீடூழி தழைத்திடு நாள்
பாமனஞ்சூழ் மாறனெழிற் பாடலிங்கு முழங்கிடுநாள்
பார்புகழும் வயிணவத்தின் பண்புநிதம் கொழித்திடுநாள்
சேம மிகு ராமானுஜ தேசிகரி வணுதித்த
செய்யதனுர் மதிமூலம் சேர்ந்ததிரு நன்னாளே.

பெருமாள் தீர்த்தவிநியோகம் பண்ணி அர்க்ய பாத்யாசமனீயம் ஸமர்பித்துத் திருத்துழாயை எடுத்து

"பர்யங்காஸனம் கண்டருள வேணும்" என்று திருத்துழாயைத் திருவடிகளில் சேர்த்து.

"பந்நகாதீச பர்யங்கே ரமாஹஸ்தோப தானகே !
ஸுகம் சேஷ்வவருஷாத்ரீச ஸுதர்சனஸுரக்ஷித: ||
"உறகலுறகலுறக வொண் சுடராழியே! சங்கே!
அறவெறி நாந்தகவாளே! அழகிய சாரங்கமே! தண்டே!
இறவுபடாமலிருந்த வெண்மருலோகபாலீர்காள்!
பறவையரையா! உறகல் பள்ளியறைகுறிக்கொண்மின்."

என்று அநுசந்தித்து. கோவிலாழ்வார் திருக்காப்புச் சேர்த்து ஸ்ரீபாததீர்த்த விநியோகம் பண்ணி

"ஸமஸ்த பரிவாரய ஸர்வமங்களவிக்ரஹாய ஸ்ரீமதே நாராயணாய நம: " என்றும்

"உபசாராபதேசேன க்ருதானஹரஹர்மயா !
அபசாரானிமான் ஸர்வான் க்ஷமஸ்வ புருஷோத்தம ||" என்றும்

ப்ரார்த்தித்துத் தண்டன் சமர்ப்பிக்கிறது.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

அப்பன் திருவடிகளே சரணம்.

திருவாராதனக்ரமம் ஸம்பூர்ணம்.